வெளியீடு எண் 422

திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு

திருப்பதிகக் கல்வெட்டுக்கள்



திருஞானசம்பந்தர்

21—8—'58

தருமபுர ஆதீனம்

வெளியீடு எண் 422

உ

குருபாதம்

திருப்பல்லவனீச்சரத் திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகக் கல்வெட்டுக்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

திருவுள்ளப் பாங்கின்வண்ணம்

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1958

உ

குருபாதம்

முன்னுரை

காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த திருப்பல்லவனீச்சரம் திருச்சாய்க்காடு ஆகிய தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற இரண்டு தலங்களிலும் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப் பாங்கின்வண்ணம், சலவைக் கற்களிற் பொறிக்கப் பெற்ற அத் தலத் திருப்பதிகங்கள் 21—8—58 காலை சென்னை மாநில அறநிலயத்துறை அமைச்சர் நல்லறங்காவலர் கனம். திரு. M. பக்தவத்சலம் B.A., B.L. அவர்களால் திறந்துவைக்கப்பெறுகின்றன.

அன்பர்கள் ஓதிப் பயனுறுவார்களாக.

6-5

உ

குருபாதம்

பூம்புகார்

குழலினேசை வீணைமோந்தை கோட்டமுழவதிரக்
கழலினேசை யார்க்கவாடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்டிரைமோண்டேறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே.

தோற்றுவாய்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தமிழ் கூறும் நல்லுலகம் வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு எனப் போற்றப் பெற்றது அக்காலத்தில். சேரசோழ பாண்டியர்களாகிய முடியுடைய மூவேந்தர் இருந்து அரசு புரிந்தனர் தமிழகத்தை. சங்ககால இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் பண்டைத் தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் ஆகும். மிகப்பழங்காலந் தொட்டே இந்நாட்டை மூவேந்தர்கள் ஆண்டுவந்த செய்தி வரலாற்றால் அறியப் படுகின்றது. பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் எகிப்து, கிரீஸ் முதலிய பிறநாட்டினரோடு வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். மேலை நாடுகளிலிருந்து நம்நாட்டிற்குத் தூதுவந்த பார்வையாளர்கள் எழுதிய குறிப்புக்களும் இலக்கியச் செய்யுட்களும் சமய நூல்களும் இதனைத் தெளிவாக அறிவிக்கின்றன. பாரத காலத்திலேயே தமிழ்நாட்டில் மூவேந்தர் அரசுபுரிந்த

செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்ருலும் பிறவற்ருலும் தமிழர்கள் பழங்குடி மக்களேன்பதை அறியலாம். பரிமேலழகர் வள்ளுவர் கூறிய பழங்குடி என்ற சொல்லுக்குச் 'சேர சோழ பாண்டியர் என்ருற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டுவரும் குடி' என்று மூவேந்தருடைய குடி பழமையைப் பாராட்டிப் பேசுகிருர். இக்குடியினுடைய தோற்றத்தை அறிய முற்படுவது நதிமூலம் ரிஷி மூலம் இவற்றை ஆராய முற்படுவது போலத்தான் இயலாத தோன்ருய் முடியும்.

சோழநாடு

"வைகை ஆற்றின் வடக்கும் மருதை ஆற்றின் தெற்கும் கருவூர்க்குக் கிழக்கும் மருவூர்க்கு மேற்குமாகிய நான்கு எல்லைக்கு உட்பட்டது நீர்நாடு எனப்படும் சோழநாடு எனச் சேனவரையர் எழுதினர். சோழ மண்டலம் அரசியல் ஆட்சி முறைக்கு ஏற்ப வளநாடுகளாகவும் நாடுகளாகவும் கூற்றங்களாகவும் குறிக்கப்பெற்றிருந்தன. இந்நாட்டின் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம். பிற்காலத்தில் சோழ மன்னர்களால் உறையூர், தஞ்சை, பழையாறை கங்கைகோண்ட சோழபுரம், திருவாரூர் முதலிய உள்நாட்டு நகரங்கள் தலைநகர்களாயின. காவிரிப்பூம்பட்டினம் சோழ அரசர்களுக்கும் மதுரை பாண்டிய மன்னர்களுக்கும் வஞ்சி சேர மன்னர்களுக்கும் சிறந்த தலைநகர்களாய் இருந்தன. இந்நாளில் தமிழ்ப் பேரரசர்கள் வாழ்ந்த அரண்மனைகள் இந்நகரங்களில் இல்லை. அம்மன்னர்கள் எழுப்பிய திருக்கோயில்கள் என்றும் நின்று அவர்களுடைய புகழை விளக்குகின்றன. தன்வாழ்வு பொதுவாழ்வு அல்லது சமய வாழ்வு இவற்றுள் தன்வாழ்வு அழிந்தாலும் ஏனையவை

னல்லோர்க்கும் பயன்படும் என்பதை அவர்கள் திருப் பணிகள் தமிழகத்திற்கு அறிவுறுத்தி நிற்கின்றன. இம் மூன்று தலைநகரங்களையும் ஒருங்கே இணைத்துப் பாடிய இலக்கியப் பாடல்கள் பல.

தலைநகர்

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பியல்பை நாம் ஒருவாறு உணரச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பட்டினப் பாலையும் துணை செய்கின்றன. மணிமேகலைக் காப்பியப் பதிகத்தில் இந்நகரின் பழமை மிக்க அழகாகக் கூறப்பட்டுள்ளது. சம்புத்தீவின் தேய்வமாகிய சம்பு என்பாள் பூம்புகாரில் தவம் சேய்து கோண்டிருக்கும் போழுது அகத்திய மாமுனிவரின் கமண்டலம் கவிழ்ந்து, கடலை நோக்கி ஒடிவந்த காவிரிப்பாவை சம்புத் தேய்வத்தை வணங்கி நின்ருள். அவள் மிக மகிழ்ச்சி அடைந்து உலகத்தைப் படைத்த நான்முகன் என்பேயரை அதற்கு இட்டான். இப்போழுது நான் உன் பேயரை இதற்கு இடுகிறேன் என்று அவளை வாழ்த்தியது. அன்று தோட்டு இந்நகர் சம்பாபதி காவிரிப்பூம்பட்டினம் என்ற பேயர்களால் வழங்கப்பட்டது. இளங்கோவடிகள் இமயத்தோடு இந்நகரை ஒப்பிட்டு இரண்டையும் உயர்ந்தவர்கள் வாழ்தலால் சிறந்தன என்று கூறுகிருர்.

நகர்ச்சிறப்பு

காவிரி கடலோடு கலக்குமிடத்து இந்நகர் விளங்குகிறது. காவிரிபுகும்பட்டினம் என்ருே காவிரிப்பூம்பட்டினம் என்ருே இந்நகரின் பேயரை இலக்கிய வாணர்கள் கூறுவர். காவிரி புகுதலை உடையதால் புகாரேனப் பேயர்

பெற்றது. " முழங்குகடல் ஞாலம் முழுவது வரினும் " வழங்கக் குறையாத செல்வவளம் இங்நகரில் இருந்தது என இளங்கோவடிகள் கூறுகிறார். பொருள்வயிற்பிரிய எண்ணுகின்ற தலைமகன் தன் நெஞ்சை நோக்கி'' முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும் என்தலைமகளைத் தனியே பிரிந்து வாரேன் வாழிய நெஞ்சே '' என்று கூறுவதாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் இங்நகரின் செல்வச் சிறப்பை எடுத்தோதுவர். ஒரு பெண்ணின் அழகைப் பாராட்ட எண்ணும் கவிஞன் காவிரிப்பூம்பட்டினத்தை உவமையாக வைத்து அங்நகரை ஒத்த அழகி எனக் கூறும் சிறப்பு இங்நகருக்கு உண்டு.

நகர் அமைப்பு

இங்நகர் மருவூர்ப் பாக்கம் பட்டினப் பாக்கம் என இரண்டு பிரிவினதாக அமைந்திருந்தது. மருவூர்ப் பாக்கம் கடலை அடுத்த கரையோரப்பகுதி. இங்கு மாளிகைகள் பல இருந்தன. வெளிநாடுகளிலிருந்து வரும் யாத்ரிகர்களும் வணிகர்களும் இம்மாளிகைகளில் கலந்திருந்துறைந்தனர். வண்ணம், சுண்ணம், பூ, புகை முதலிய மணப்பொருள் களை விற்கும் வணிகர் வாழுந் தெருவும், பட்டாடை கம்பளி ஆடை, பருத்தி ஆடை முதலியவற்றை நெய்து விற்கும் நெசவாளர்கள் வாழும் வீடுகளும், பவழம் முத்து மணி, பொன், அகில் சந்தனம் முதலியவற்றை விற்பனை செய்வோர் வாழும் வீடுகளும் உள்ள தெருக்களையுடையது இப்பாக்கம். மளிகைப் பொருள்களாகிய எண்வகைக் கூலங்களை விற்போர் தெருக்களும் பரதவர், பிட்டு அப்பம் முதலிய விற்பவர்கள், வெற்றிலை கட்டுவோர், இறைச்சி விற்பார், உப்பு விற்பார், கப்பலோட்டிகள்

முதலிய மக்கள் வாழ்கின்ற தெருக்களும் இங்கு உள்ளன. வெண்கலம் செம்பு முதலியவற்ருல் பாத்திரங்கள் வனேவோரும், தச்சரும், கொல்லரும், ஓவியரும், சுதைச் சிற்பம் செய்வோரும், தட்டாரும், தோல் தொழில் செய்கின்றவர்களும், பாணர்களும் இப்பாக்கத்தில் குடி இருந்தனர். இங்குப் பகலிலும் இரவிலும் கடைத்தெரு நடைபெறும். பகலில் நடைபெறும் கடைத்தெரு நாளங்காடி என்றும் இரவில் நடைபெறும் கடைத்தெரு அல்லங்காடி என்றும் வழங்கப்பெறும்.

பட்டினப்பாக்கம் அரசர்கள் வாழும் தெருக்களேயும் தேரோடும் தெருக்களேயும் வணிகர்வாழுந் தெருக்களேயும் உழவர், காலக்கணிதர், முத்துக்கோற்பார், சங்கு அறுப்பார், சூதர், மகதர், வேதாளிகர், கணிகையர், ஆடற் கூத்தியர், இசைவாணர்கள் முதலியோர் வாழும் தெருக் களேயும் குதிரை செலுத்துவார், யானேப்பாகர், தேரோட்டுவோர் வீரர் முதலியோர் வாழும் தெருக்களேயும் உடையது. இங்குத்திருமாவளவன் பகைவர்தந்த திறைப்பொருள்களேக் காட்சிப் பொருள்களாக வைத்திருந்தான். அவற்றுள் சிறந்தன வச்சிரநாட்டு வேந்தன் கொடுத்த முத்துப் பந்தல், மகதநாட்டு மன்னன் கொடுத்த பட்டிமண்டபம், அவந்தி நாட்டு வேந்தன் கொடுத்த வாயில் தோரணம் முதலியனவாகும். இங்கு இருந்த ஐவகை மன்றங்கள் சிலப்பதிகாரத்தால் சிறப்பிக்கப்படுகின்றன. களவு செய்வோரைத் தண்டிக்கும் வெள்ளிடை மன்றம், நோய் நீக்கப் பெறுதற்குரிய இலஞ்சி மன்றம், நஞ்சுண்டவர், பாம்பு முதலியன கடிக்கப்பெற்றவர்கள், பேய்தீண்டப்பெற்ருர் ஆகியவர்களுக்கு அதிலிருந்து விடுதலே தருகின்ற நெடுங்கல் மன்றம், ஒழுக்கம் தவறுபவர்களேத் தண்டிக்கும் பூதசதுக்கம், நீதி தவறியதைக் காட்ட நிற்கும் பாவை

மன்றம் ஆகியவை சிறந்தனவாகும். இப்பாக்கத்தில் பல கோயில்கள் இருந்தன. இந்திரன் மருத நிலத்திற்குரிய தெய்வம். சோழநாடு முழுதும் மருதவளத்தால் சிறந் திருப்பது. எனவே சோழமன்னர்கள் இந்திர விழா என்னும் ஒரு திருவிழாவைக் கொண்டாடினர். இந்திரனுக்கு ஒரு கோயில். அவனுடைய வச்சிராயுதத்திற்கு ஒரு கோயில். அவன் ஊர்தியாகிய ஐராவதத்திற்கு ஒரு கோயில் அவனுடைய மரமாகிய கற்பகத் தருவுக்கு ஒரு கோயில். இப்படிப் பல கோயில்கள் இந்திரனுக்காகவே எடுத்திருந் தான். பிறவாயாக்கைப் பெரியோனுகிய சிவபெருமான் அறுமுகச் செவ்வேள், வால்வளைமேனிவாலியோன் ஆகிய பலதேவன், நீலமேனி நெடியோன், மாலை வெண் குடை மன்னவன் ஆகியோர்க்குத் தனித்தனி கோயில்கள் இருந்தன. சமணர்கள் வாழ்கின்ற பல பள்ளிகளும், அறச்சாலைகளும் இப்பகுதியில் இருந்தனஎன்று தெரிகிறது. இருகாமத்திணை ஏரி என பட்டினப்பாலையால் இதைச் சிறப்பிக்கப்பெறும் சோமகுண்டம் சூரிய குண்டம் முதலிய திருக்குளங்கள் இந்நகரிலிருந்ததாகத் தேவந்தி வாயிலாக இளங்கோவடிகள் கூறுகிருர். இந்நகரில் மற்றும் பல கோயில்கள் விளங்கினதாம். உச்சிக்கிழான் கோட்டம், சாத்தன் கோட்டம், அருகன் கோட்டம், சந்திரன் கோட்டம் என்றெல்லாம் பல கோயில்கள் இருந் தனவாகப் பேசப்படுகின்றன. இங்குள்ள அறச்சாலைகளின் சிறப்பைப் பட்டினப்பாலை பாராட்டுகிறது. சோறு வடித்த கஞ்சி ஆறு போலப் பெருகி ஏர்போரச் சேருகி தேரோடத் துகள்கெழுமி அப்புழுதிகள் வெண்கோயில்களை மாசூட்டுகின்றன என்று கூறுகிருர்.

நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும் காலின் வந்த கருங் கறி மூடையும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் துகிரும், ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும், கங்கை வாரியும் காவிரிப் பயனும் இந்நகரில் வாணிக வளமாகப் பெருகிக் குவிந்து இருந்தன என்று பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

இந்நகரில் ஐந்து வனங்கள் இருந்தன. உவவனம், சம்பாதி வனம், இலவந்திகை, உய்யானவனம், கவேர வனம் என்று இவை பெயர் பெறும். உவவனத்தில் புத்த பீடிகை ஒன்று இருந்தது. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய செந்தமிழ்ப் பெண் மணிமேகலை இவ் வனத்திலிருந்து மணிமேகலா தெய்வத்தால் எடுத்துச் செல்லப்பெற்ருள்.

சில சோழமன்னர்கள்

மகனைத் தேரில் கடத்தி நீதிகாத்த மனுநீதிச்சோழன் திருவாரூரில் தியாகேசப் பெருமானை எழுந்தருளுவித்த முசுகுந்தன், புருவின்உயிருக்காகத் தன்னுயிரைத்தியாகம் செய்த சிபிச்சக்கிரவர்த்தி, காவிரிக்குக் கரைகண்ட காந்தமன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் இவர்கள் மிகப் பழைய முற்காலச் சோழ மன்னர்கள் ஆவர். இமயத்தில் புலிபொறித்த கரிகால் பெருவளத்தான், புலவர் சொல் போற்றிய கிள்ளிவளவன், செந்தமிழ்ப் புலவனுகிய நலங்கிள்ளி, உறையூரைத் தலைநகர் ஆக்கிய தித்தன், பெருங்கிள்ளி நல்லுருத்திரன், நட்புக்கு நல்ல விளக்கம்தந்த கோப்பெருஞ்சோழன், யானை ஏருத மாடக் கோயில்எழுபதுஅமைத்தகோச்செங்கட் சோழன்ஆகியோர் இடைக்காலத்து அரசர்களில் மிகச் சிறந்தவர்கள். பிற் காலத்து விஜயாலயன் இராசராச சோழன், இராஜேந்திர

சோழன் இராசாதிராசன், விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன் முதலியோர் சிறந்த சமயப்பணி தமிழ்ப்பணிசெய்து நாடு ஆண்ட நல்லரசர்கள் ஆவர். இவர்களில் பலர் திருமுறைகளாலும் பாராட்டப் பெற்றவர்கள்.

இன்றைய நிலை

காவிரிப்பூம் பட்டினம் இன்று வேற்றிடமாகக் காட்சி அளிக்கின்றது. ஆனாலும் மிகப் பழைய காலச் சின்னங்களாகத்திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண் காடு ஆகிய திருத்தலங்கள் சமயகுரவர்களால் பாராட்டப் பெறும் பழஞ் சிறப்புடையன. திருவெண்காட்டிலுள்ள முக்குளம் சோமகுண்டம் சூரியகுண்டம் என்று சிலப்பதி காரத்தால் குறிக்கப்பெறும் தீர்த்தங்களாக எண்ணலாம். பிற்காலத்தில் இவ் விரு குளங்களோடு மற்றொன்றையும் சேர்த்து முக்குளங்களாக மக்கள் ஆக்கி இருக்கலாம். முக்குள நீரில் மூழ்கி எழுந்தவர் நல்ல பிள்ளைகளைப் பெறுவர் என்று தேவாரமும் கூறுகிறது.

" பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளம் நினை
வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும்
வேயன தோளுமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினை யாரவர் தம்மைத் தோயாவாம் தீவினையே "

என்று திருஞானசம்பந்தர் இத் திருக்குளங்களின் தெய்வத் தன்மையைப் பாராட்டுகிறார். இத் திருப்பாடல் மெய் கண்டாரைத் தோற்றுவித்தது. அச்சுதகளப்பாளர் தமக்குப் பிள்ளை இல்லாக் குறையை அருணந்தி சிவாச்சாரி யாரிடம் தெரிவிக்க அவர் திருமுறைகளில் கயிறு சார்த் திப் பார்த்து அப்பொழுது ' பேயடையாப் பிரிவெய்தும் '

என்ற திருஞான சம்பந்தப்பெருமானின் தேவாரப்பாடல் உதயமானதைக்கண்டு வேண்காட்டில் முக்குளநீராடுங்கள். வேண்டியது கிடைக்கும் என்று கூற, அவ்வாறே அச்சுத களப்பாளரும் அவர் மனைவியாரும் அத்திருக்குளங்களில் மூழ்கி மேய்கண்டாரைப் பேற்று எடுத்தனர் என்பது வரலாறு. இவர் மேய்கண்டார் சைவசாத்திர நூல்கட்கு மூலமாயுள்ள சிவஞான போதத்தை யருளிச் சேய்தவர். காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாதிவனம் என்ற பழமையான சிறுகாடு ஒன்றும் அதில் சம்பாபதி என்னும் அம்பிகை கோயிலும், சதுக்கப் பூதங்களோ என்று எண்ணத்தக்க சுதைச் சிற்பங்களும் உள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தோடு தோடர்புபடுத்தி எண்ணக் கூடிய ஊர்கள் பலவுண்டு. திருக்கடவூர் மாதவி வாழ்ந்த ஊராகத் தெருக்கூத்துப் பாடல்களில் பாடப்படுகின்றன. திருக்கடவூரிலும் மாதவி குட்டை என்று ஒரு சிறு குளமும் வழங்கப்படுகின்றது. தலைச்சங்காடு என்ற ஊர் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதாகும். மேலைப்பேரும் பள்ளம் கீழைப்பேரும்பள்ளம் என்னும் ஊர்கள் காவிரிப்பூம் பட்டினத்தின் அகழிகளாக இருக்கலாமோ என்றும் ஐயுறு கிறார்கள். இவற்றை எண்ணும்போது காவிரிப்பூம் பட்டினத்தின் நில எல்லை மிக்க விரிவடைகிறது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உறையூர்வரை சேல்ல ஒரு மட்சாலை மன்னர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. அது இன்றும் காவிரிக்கு வடகரையைத் தோடர்ந்து சேல்லுகிறது. இந்நேடு வழியில் மன்னர்கள் சேல்லும் போது அவர்களுக்கு நிழல்தர மருந்து மரங்களாகிய மருது, வேம்பு முதலியன வைத்து வளர்க்கப்பேற்றுள்ளன.

நீர் வேட்கை எடுப்போர்க்குத் தாகமடக்கக் கோடையில் காய்க்கும் மாவடு உதவும் என்ற எண்ணத்தில் மாமரமும் வைத்து வளர்த்திருக்கிறார்கள்.

பட்டினத்து முனிவர் ஆகிய தெய்வத் தமிழ்க் கவிஞர் தோன்றிய திருநகர் இக்காவிரிப்பூம்பட்டினம் ஆகும். பட்டினத்திற்றோன்றிய பாவலரைப் பட்டினத்தார் என்றே மக்கள் வழங்கினர். பட்டினத்தடிகளின் இளமைத்திரு நாமம் திருவெண்காடர். இவர் இறைவனது திருவருள் பெற்றுச் சிறந்த அற்புதங்களை நிகழ்த்தி இறைவன்மேல் பல பிரபந்தங்களைச் செய்துள்ளார். இயற்பகையார் அவதரித்ததும் இங்குத்தான்.

திருப்பல்லவனீச்சரம்

இது காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் எனத் தேவாரங்களில் குறிக்கப்பெறுகிறது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்த மூர்த்திகள் பாடிய தேவாரத்திருப்பதிகம் இரண்டு உள்ளன.

திருச்சாய்க்காடு

இது சாயாவனம் என வழங்கப்பெறுகிறது. பல்லவனீச்சரத்திற்கும் இதற்கும் இடையே கால்மைல் அளவுதான். இந்திரன் தன்னுடைய தாயார் விருப்பப்படி இத் தலத்திலுள்ள சிவபெருமானை எடுக்கமுயன்றான். சிவபெருமான் ஆதிசேடனுடைய நாகரத்தினங்களால் இந்திரனது கண்ணொளியை மழுங்கச்செய்தார். இந்திரன் சிவலிங்கத் திருமேனியைப் பேயர்க்க முடியாமல் வருந்திப் பெருமான் திருவருளை வியந்து திருக்கோயிலைப்புதுப்பித்துச்சென்றான்.

உபமன்யு இங்குப் பெருமானைப் பூசித்துள்ளார். காசிக்குச் சமமான தலங்கள் ஆறனுள் இதுவும் ஒன்று. இத்தலத்திற்குச் சம்பந்தர், அப்பர் பாடிய பதிகங்கள் நான்கு உள்ளன. இறைவன் சாயாவனேசுவரர். இறைவி குயிலினும் நன்மொழியம்மை. இவ் விரண்டு தலங்களும் காவிரிப்பூம்பட்டினத்தின் எல்லைக்குட்பட்டனவாகும்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலியுலகிற்கவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்து ஒழுகலான்.

— இளங்கோவடிகள்



உ

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லவனீச்சரம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளியன

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கண்மூன்று மாரழ லில்லழுந்த
விடையார்மேனியராய்ச் சீறும் வித்தகர்மேயவிடங்
கடையார்மாட நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே. 1

எண்ணாரெயில்கண் மூன்றுஞ்சீறு மெந்தைபிரா
னிமையோர்
கண்ணாயுலகங் காக்கநின்ற கண்ணுதனண்ணுமிடம்
மண்ணார்சோலைக் கோலவண்டு வைகலுந்தேனருந்திப்
பண்ணார்செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. 2

மங்கையங்கோர் பாகமாக வாணிலவார்சடைமேற்
கங்கையங்கே வாழவைத்த கள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர் புணரியோத மீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. 3

தாரார்கொன்றை பொன்றயங்கச் சாத்தியமார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த நின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசைபாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே. 4

மைசேர்கண்ட ரண்டவாணர் வானவருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த மேவியிருந்தவிடங்
கைசேர்வளையார் விழைவினோடு காதன்மையாற்கழலே
பைசேரரவா ரல்குலார்சேர் பல்லவனீச்சரமே. 5

குழலினோசை வீணைமொந்தை கொட்டமுழவதிரக்
கழலினோசை யார்க்கவாடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. 6

வெந்தலாய வேந்தன்வேள்வி வேறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன் பேணநின்ற மைந்தன்மகிழ்ந்தவிடம்
மந்தலாய மல்லிகையும் புன்னைவளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. 7

தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்கவவன்
றாரரக்குந் திண்முடிக ளூன்றியசங்கரனூர்
காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்
பாரரக்கம் பயில்புகாரிற் யல்லவனீச்சரமே. 8

அங்கமாறும் வேதநான்கு மோதுமயனெடுமால்
தங்கணாலு நேடநின்ற சங்கரன்றங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி வார்கடலூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. 9

உண்டுடுக்கை யின்றியேநின் றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார் கண்டறியாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண் டீரநல்கும் பல்லவனீச்சரமே. 10

பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னை யணிகோள்காழி ஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர் தீவினைநோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி லுயர்விணுேடோங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

ஈரடி - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பரசுபாணியர் பாடல்வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்று
ரிவர்தன்மை யறிவாரார். 1

பட்டநெற்றியர் நட்டமாடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திட்டமா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 2

பவளமேனியர் திகழுநீற்றினர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தழகரா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 3

பண்ணில்யாழினர் பயிலுமொந்தையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தண்ணலா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 4

பல்லிலோட்டினர் பலிகொண்டுண்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெல்லியாட் டுகந்தா
ரிவர்தன்மை யறிவாரார். 5

பச்சைமேனியர் பிச்சைகொள்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திச்சையா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 6

பைங்கணேற்றினர் திங்கள்சூடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தேங்குமா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 7

பாதங்கைதொழ வேதமோதுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தாதியா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 8

படிகொண்மேனியர் கடிகொள்கொன்றையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தடிகளா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 9

பறைகொள்பாணியர் பிறைகொள்சென்னியர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திறைவரா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். 10

வானமாள்வதற் கூனமொன்றிலை
மாதர்பல்லவ னீச்சரத்தானை
ஞானசம்பந்த னற்றமிழ்சொல்ல
வல்லவர் நல்லவரே. 11

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

திருச்சாய்க்காடு

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரேனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே. 1

போய்க்காடே மறைந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக வுடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே யிடமாக வந்தடைந்த
பேய்க்காடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே. 2

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 3

கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் பொன்னியன்ற
தட்டலர்த்த பூஞ்செருந்தி கோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்த தடந்தாழை முருகுயிர்க்குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி பாதமே. 4

கோங்கன்ன குவிமுலையாள் கொழும்பணைத்தோட் கொடியிடையைப்
பாங்கென்ன வைத்துகந்தான் படர்சடைமேற்பான்மதியந்
தாங்கினான் பூம்புகார்ச் சாய்க்காட்டான் றாணிழற்கீழ்
ஓங்கினா ரோங்கினா ரெனவுரைக்கு முலகமே. 5

சாந்தாக நீறணிந்தான் சாய்க்காட்டான் காமனைமுன்
தீந்தாக மெரிகொளுவச் செற்றுகந்தான் றிருமுடிமேல்
ஒய்ந்தார மதிசூடி யொளிதிகழு மலைமகடோள்
தோய்ந்தாகம் பாகமா வுடையானும் விடையானே. ௭

மங்குரேய் மணிமாட மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாங் கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலா வரிவண்டின் னிசைபாடு மலர்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே.

தொடலரிய தொருகணையாற் புரமூன்று மெரியுண்ணப்
படவரவத் தெழிலாரம் பூண்டான்பண் டரக்கனையுந்
தடவரையாற்றடவரைத்தோளூன்றினான்சாய்க்காட்டை
இடவகையா லடைவோமென்றெண்ணுவார்க்கிடரிலையே

வையநீ ரேற்றானு மலருறையு நான்முகனும்
ஐயன்மா ரிருவர்க்கு மளப்பரிதா லவன்பெருமை
தையலார் பாட்டோவாச் சாய்க்காட்டெம் பெருமானைத்
தெய்வமாப் பேணாதார் தெளிவுடைமை தேரேமே. ௯

குறங்காட்டுநால்விரலிகோவணத்துக்கோலோவிப்போ
அறங்காட்டுஞ் சமணருஞ் சாக்கியரு மலர்தூற்றுந்
திறங்காட்டல் கேளாதே தெளிவுடையீர் சென்றடைமின்
புறங்காட்டி லாடலான் பூம்புகார்ச் சாய்க்காடே. 10

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலு மரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே. 11

திருச்சிற்றம்பலம்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம் :

உள்நாடு ரூ. 1—50   வெளிநாடு ரூ. 2—00

செயலாளர்,

" ஞானசம்பந்தம் " காரியாலயம்,

தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல்,

தஞ்சை மாவட்டம்.

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.